# மணப்பாறை நகராட்சி

**2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10.11.2023-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு அறிஞர் அண்ணா நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 10.11.2023 | **25.10.2023-ம் தேதியன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் பொருள் எண்.01-ல் ஒத்திவைக்கப்பட்ட கூட்ட பொருள்**<br>**பொருள் – 1**<br>இந்நகராட்சியில் செயலற்ற கணக்குகள் மற்றும் வட்டிநிதித்திட்டம் 2023-2024ஆம் ஆண்டு நிதி திட்டத்தின் கீழ் தார்சாலை மற்றும் சிமெண்ட்சாலை அமைக்கும் பணிக்கு ரூ.331.00 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் 12.07.2023-ஆம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.ஆர்.எ.குழந்தைவேல் என்பவர் திரு.வி.ஆனந்தன் ஒப்பந்ததாரர் வலசுப்பட்டி மருங்காபுரி அவர்களின் ஆவணத்தை தவறாக பயன்படுத்தியுள்ளதாக தெரிவித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD)No.17306/2023 தொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் இந்நகராட்சி சார்பாக திரு.R.பாஸ்கரன், அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர்,மதுரை ஆஜரானதில் வழக்கிற்கான கட்டண தொகை ரூ.40,000/-ஐ வழக்கின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும், செலவினத்தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:-**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(**ந.க.எண்:**1775/2023/**இ**1) | **தீர்மான எண்.408**<br>**அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**<br>**ஆட்சேபனை தெரிவித்த**<br>1. திருமதி.ஆர்.முத்துலெட்சுமி. நகர்மன்றத் துணைத்தலைவர்<br>2. திருமதி.கோ.லெட்சுமி, 5-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>3. திருமதி.மு.வசந்தாதேவி, 14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்<br>4. திரு.த.தங்கமணி, 19-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>5. திருமதி.த.மனோன்மணி, 20-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>ஆகியோர்களின் ஆட்சேபணை கடிதம் ஒட்டப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 10.11.2023 | **பொருள் – 2**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர நில அளவு வார்டு எண்: எப், பிளாக் எண். 11, நகரளவு எண். 2/18 ( பழைய சர்வே எண். 672/1எ2-பகுதி) கொண்ட 0.487 ஏக்கர் நிலப்பரப்பில் புதியதாக மனைப்பிரிவு அமைக்க திருமதி.சிவப்பிரியா க/பெ.செந்தில்குமார், என்பவர் நகர் ஊரமைப்பு துறைக்கு இணையதள வாயிலாக விண்ணப்பம் செய்ததற்கு, இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் 26.06.2023-ஆம் தேதிய இணையதள வாயிலான அனுமதி எண்.2K1X9NIE/2022/TCPஇல் மேற்படி 0.487ஏக்கர் பரப்பில் 9 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கி வரப்பெற்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு :</u><br>(அ) நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் 20.10.2022 ஆம் தேதிய சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி2 இன் தெரிவிக்கப்பட்ட படி மனைப்பிரிவில் ஏற்படுத்தப்பட வேண்டிய அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் வசதி மற்றும் சிறு பாலங்கள் ஆகிய பணிகளை மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களே மேற்கொள்ளும் இனங்களுக்கு மூன்றாம் நபர் வாயிலாக ஆய்வு செய்யப்படுதல் வேண்டும் என்பதால் இந்நகராட்சிக்கு அருகில் உள்ள இந்திராகணேசன் பொறியியல் கல்லூரி, மணிகண்டம், திருச்சி , கல்லூரி முதல்வர் /துறை தலைவர் அவர்களை ஆய்வு செய்து ஆய்வறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டு 22.09.2023 அன்று மூன்றாம் நபர் வாயிலான ஆய்வறிக்கை பெறப்பட்டு பொறியியல் பிரிவின் குறிப்பும் பெறப்பட்டது.<br><br>(ஆ) இம்மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட சாலைகளுக்கான மொத்தப்பரப்பளவு 507.35 சதுர மீட்டர் (அ) 5461.07 சதுர அடி (அ) 0.125 ஏக்கர் இடங்கள் தானப்பத்திர பதிவு எண். 4220/2023, நாள்.06.06.2023 அன்று நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டும், சாலைகளை நகராட்சி நில அளவை ஆவணங்களின் படி வார்டு எண் எப் , பிளாக் எண்.11, நகரளவு எண்கள்.2/19 மற்றும் 2/20 என எண்ணிட்டு பட்டா உட்பிரிவும், ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாறுதலும் | **தீர்மான எண்.409**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | செய்யப்பட்டது.<br><br>(இ) இம் மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட பொது இடம் 9.0 சதுர மீட்டர் (அ) 96.87 சதுர அடி இடமும் தானப்பத்திர பதிவு எண். 4220/2023, நாள்.06.06.2023 அன்று நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டும், பொது இடம் நகராட்சி நில அளவை ஆவணங்களின் படி வார்டு எண். எப், பிளாக் எண்.11, நகரளவு எண்.2/21 என எண்ணிட்டு பட்டா உட்பிரிவும், ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாறுதலும் செய்யப்பட்டது.<br><br>(ஈ) இம்மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட சாலைகளில் சோலார் மின் கம்பங்கள் மனுதாரர் திருமதி.சிவப்பிரியா க/பெ.செந்தில்குமார், அவர்களால் அமைக்கப்பட்டுள்ளது.<br><br>(உ) இம்மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட சாலைகள் தார் சாலைகளாக மேம்படுத்தப்பட்ட விவரம் உரிய சாலைப்பதிவேடுகளில் பதிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>(ஊ) இம்மனைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் வசதி மற்றும் சிறு பாலங்கள் ஆகிய பணிகளை மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களே மேற்கொள்ளும் இனங்களுக்கு ஏக்கருக்கு ரூ.1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) திரும்ப வழங்க கூடிய வைப்புத் தொகை என்ற அடிப்படையில் ரூ.1.00 இலட்சம் (ஒரு இலட்சம் மட்டும்) வைப்புத் தொகையாகவும், மனைப்பிரிவு அமைக்க நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம் ரூ.18,000(ரூபாய் பதினெட்டாயிரம் மட்டும்) (மனைப்பிரிவு விண்ணப்ப கட்டணம்- ரூ.4000.00+மனைப்பிரிவாக மாற்றும் கட்டணம்- ரூ.10,000.00+ சி.எஸ்.ஆர். கட்டணம் 2,000.00+ கொடி நாள் கட்டணம்- ரூ.2,000.00) ஆக மொத்த கட்டணம்- ரூ.1,18,000.00-த்தினை( ஒரு இலட்சத்தி பதினெட்டாயிரம் மட்டும்) செலுத்துச் சீட்டு எண். 085/CP/23-24/0000857, நாள் 13.10.2023 அன்று பெறப்பட்டது.<br><br>(எ) இம்மனைப்பிரிவிற்கான அடிப்படை வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் வசதி | |

| | | |
|---|---|---|
| | மற்றும் சிறு பாலங்கள் ஆகிய பணிகளை மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களே மேற்கொள்ளும் இனங்களுக்கு மனைப்பிரிவில் உள்ள மொத்த மனைகளில் 60 சதவீத மனைகள் விற்கப்படுதல் அல்லது 5 ஆண்டுகள் இதில் எது முதலில் வருகிறதோ அதுவரை மனுதாரரால் பராமரிப்பு மேற்கொள்ளப்பட்டு அதன் பின் திரும்ப வழங்கலாம்.<br>மேற்படி அ முதல் எ வரையிலான பொருள்களின் படி திருமதி.சிவப்பிரியா க/பெ.செந்தில்குமார், அவர்களால் அமைக்கப்பட் 9 மனைகளுக்கு ஒப்புதல் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1003/2023/எப்.1 | |
| 10.11.2023 | **பொருள் – 3**<br>மணப்பாறை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகர நில அளவு வார்டு எண்: எ, பிளாக் எண். 02, நகரளவு எண்கள். 5/2 முதல் 5/10 (பழைய சர்வே எண்கள் : 333/ 1 முதல் 333/3) கொண்ட 9.92 ஏக்கர் நிலப்பரப்பில் 239 மனைகள் கொண்ட அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்த திரு.எ.பாஸ்கரன், த/பெ. திரு.கே.ஆறுமுகம் என்பவர் 26.10.2018 அனு நகர் ஊரமைப்பு துறைக்கு இணையதள வாயிலாக விண்ணப்பம் செய்ததற்கு, இணை இயக்குநர்(மு.கூ.பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி அவர்களின் கடிதம் ந.க.எண் : 1976/2023/திமா3, நாள் : 19.07.2023 இல் மேற்படி 9.92ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த இம்மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி, ம.வ.(வ)/ந.ஊ.இ.இ.(தி.மா) எண்: 69/2023 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான அனுமதி வழங்கி வரப்பெற்ற விவரம் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு :</u>**<br>(அ)மனுதாரரால் அமைக்கப்பட்ட 239 மனைகளில் அரசாணையில் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின் படி 20.10.2016-தேதிக்கு முன் 186 மனைகள் விற்பனை செய்துள்ளார். விற்கப்படாமல் உள்ள 53 மனைகளில் பூங்காவிற்காக மனை எண்கள் 173 முதல் 177 வரையிலான 05 மனைகள் மற்றும் 186 பகுதி என மொத்தம் 06 மனைகள் 8532.00 சதுர அடி / 792.62 சதுர மீட்டர் ஒதுக்கீடு செய்யப்பட்டும், உர் மின் அழுத்த மின் பாதைக்கு கீழ் அமையப்பெற்ற 07 மனைகளை ( மனை எண்கள் 135எ, 139எ, 175எ, 186எ , 186பி , 186சி மற்றும் மனுதாரர் உபயோக மனை) விற்பனை செய்யக்கூடாத மனைகளை தவிர்த்து | **தீர்மான எண்.410**<br>**அலுவலகக்குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>மீதமுள்ள 42 மனைகளுக்கு அபிவிருத்தி கட்டணம் மற்றும் வரன் முறைக்கட்டனம் வசூலித்து பத்திர பதிவு செய்ய தடையில்லா சான்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>(ஆ)இம்மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட சாலைகளுக்கான மொத்தப்பரப்பளவு 10651.52 சதுர மீட்டர் (அ) 114652.00 சதுர அடி 2.63 ஏக்கர் இடங்கள் தானப்பத்திர பதிவு எண் 6059/2023, நாள்.12.08.2023 அன்று நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டும், சாலைகளை நகராட்சி நில அளவை ஆவணங்களின் படி வார்டு எண்.எ, பிளாக் எண்.02, நகரளவு எண்கள் : 05/36 முதல் 05/51 மற்றும் 05/54 முதல் 05/70 என எண்ணிட்டு பட்டா உட்பிரிவும், ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாறுதலும் செய்யப்பட்டது.<br><br>(இ) இம் மனைப்பிரிவில் நகர் ஊரமைப்பு துறையால் வடிவமைக்கப்பட்ட பூங்கா இடம் 792.65 சதுர மீட்டர் (அ) 8532.00 சதுர அடி (அ)0.19 ஏக்கர் இடமும் தானப்பத்திர பதிவு எண். 6059/2023, நாள்.12.08.2023 அன்று நகராட்சி ஆணையாளர் பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்து ஒப்படைக்கப்பட்டும், பூங்கா இடம் நகராட்சி நில அளவை ஆவணங்களின் படி வார்டு எண்: எ, பிளாக் எண். 02, நகரளவு எண்கள்: 05/52 மற்றும் 05/53 என எண்ணிட்டு பட்டா உட்பிரிவும், ஆணையாளர் பெயரில் பட்டா பெயர் மாறுதலும் செய்யப்பட்டது.<br>(ந.க.எண். 1870/2023/எப்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>10.11.2023</td>
<td>பொருள் – 4<br>இந்நகராட்சியில் இயங்கிவரும் கீழ்க்காணும் கணினி சார்ந்த இனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு முடிவடையவுள்ளதால் சென்ற ஆண்டு வழங்கிய அந்தந்த நிறுவனங்களிடமே கீழ்க்கண்டவாறு ஆண்டு பராமரிப்பை புதுப்பித்துக் கொள்ளவும் அதற்கான ஆண்டு பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கும் செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>கணினி உபகரணங்கள்</th><th>பராமரிப்பு பணி மேற்கொள்ளும் நிறுவனம்</th><th>பராமரிப்பு பணி ஒப்படைப்பு செய்யப்படும் காலம்</th></tr>
<tr><td>1</td><td>Dell அல்லாத கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள், pசுவிட்ச்கள், டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர்கள்.</td><td>Sumaraj IT Solution</td><td>15.11.2023 to 14.11.2024</td></tr>
</table></td>
<td>தீர்மான எண்.411<br>அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 2 | கணினிகள், மடிக்கணினிகள் DELL கணினிகள் HP MULTI PURPOSE LASER PRINTER, ANTI VIRUS | Sumaraj IT Solution | 15.11.2023 to 14.11.2024 |
| 3 | Ultra Power Solution 5 KVA UPS | Ultra Power Solution | 15.11.2023 to 14.11.2024 |
| 4 | NUMERIC UPS 5KVA | Novateur Electrical and digital Systems Pvt Ltd.) | 15.11.2023 to 14.11.2024 |
| 5 | கணினி சர்வர் அறையில் இயங்கி வரும் HITACHI SPLIT AC | Bharath Engineers | 16.03.2024 to 15.03.2025 |

**அலுவலகக்குறிப்பு**:-

மன்றம் அனுமதிக்கலாம்

10.11.2023

**பொருள் – 5**

இந்நகராட்சியில் இயங்கிவரும் 5KVA UPS (28SMF) Quantum Batary 27.09.2019 அன்று இந்நகராட்சியில் வாங்கப்பட்டு பேட்டரி தற்போது செயலிழக்கும் நிலையில் உள்ளதாகவும் சோதனை செய்து 19.10.2023 அன்று ஆண்டு பராமரிப்பு பொறியாளர் ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். இந்த UPS வாயிலாக பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு மற்றும் வரி வசூல் மையம் இயங்கி வருகின்ற நிலையில் உடனடியாக பழைய பேட்டரிகளை கொடுத்துவிட்டு புதிய பேட்டரிகளை வாங்கி நிறுவ வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | Novateur Electrical & Digital Systems PVT Limited (NUMERIC), Trichy | 33,984/- |
| 2. | Ultra Power Solutions, Villapuram, Madurai | 38,400/- |
| 3. | Sun Power Control, Madurai | 36,192/- |

**தீர்மான எண்.412**
**அலுவலகக்குறிப்பு**
**அனுமதிக்கப்பட்டது**

| | | |
|---|---|---|
| | வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Novateur Electrical & Digital Systems PVT Limited (NUMERIC), Trichy நிறுவன விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 10.11.2023 | **அ.இ.அ.தி.மு.க நகர்மன்ற உறுப்பினர்**<br>1. திரு.ச.இராமன், 27- வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்,<br>2. திரு.லெ.எத்திராஜ்,12-வது வார்டு நகர்மன்றஉறுப்பினர்,<br>3, திரு.பொ.கௌசிக், 26-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>4. திரு.அ.சவரிமுத்து, 10- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>5.திருமதி.வி.அழகுசித்ரா, 2-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>6.திருமதி.பா.சுதா, 18- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்.<br>7.திருமதி.ஆர்.தீபா, 22- வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>8. திரு.அ.எட்வின் அபிலாஷ், 4-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>9. திருமதி.எஸ்.சர்மிளா, 6-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>10. திருமதி.த.வாணி, 13-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்,<br>ஆகியோர்கள் கொண்டுவரும் கூட்டப்பொருள்<br>மணப்பாறை நகர்மன்றத்தில் தொடர்ந்து இரண்டு முறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.N.தங்கம் அவர்களுக்கு நகர்மன்றத்தின் சார்பாக இரங்கல் தீர்மானம் நிறைவேற்றுதல். | **தீர்மான எண்.413**<br>**முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு.N.தங்கம் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.** |

**(ஒம்) கீதா.ஆ.மைக்கேல்ராஜ்**
**நகர்மன்றத் தலைவர்**
**மணப்பாறை நகர்மன்றம்**